**வீரகெட்டிய பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2 மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்தவத்தின் காரணமாக வீரக்கெட்டிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டு நிறுவனம், அறிக்கையிடல் காலப்பகுதி, முதலீடு மற்றும் முதலீட்டு வட்டி மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உட்பட வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்கீடு செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது 12 நிர்மாண வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,231,698 பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் திரண்ட நிதிய மீதி முறையே சமமான பெறுமதியில் குறைத்தும் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ‘‘தொறின் தொரட்ட கமின் கமட்ட’’ செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 23 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியின் போது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 1,348,575 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,315,770 தொகையான இரண்டு நிர்மாண வேலைகளின் பெறுமதி மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக "தொரின் தொரட்ட கமின் கமட்ட" செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத நிர்மாண வேலைகளிற்காக ரூபா 13,095,446 வீதம் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை ஏற்படுத்தியமையால் ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் என்பன சமமான பெறுமதியில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வலஸ்முல்ல கொஹொலான கலவாஹேன மற்றும் தத்கஹகெரடுவ ஆகிய காணிகளில் ரூபா 200,000 பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் மூன்று காலாண்டுகளுக்குரிய உள்ளூராட்சிமன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 35,304 தொகையான பங்களிப்புத் தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 7 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 47,769,924 கூட்டுத்தொகையான சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவொன்றிற்காக 2009 ஆம் ஆண்டின் போது தென் மாகாண உள்ளூராட்சிமன்ற திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 115,000 பணத்தில் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 65,000 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 120,100 தொகையான செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 41,893 ஆன பங்களிப்புத் தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 97,859,260 கூட்டுத்தொகையான 5 காணி மற்றும் கட்டிடங்களுக்கரிய நாளதுவரையாக்கப்பட்ட காணி கட்டிட பதிவேடுகளும் ரூபா 1,734,123 நிலுவை வாடகை தொடர்பாக விரிவான பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும், ரூபா 9,627,185 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பான விரிவான பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 139,905 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான ரூபா 514,254 ஆன வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4 ஆம் பந்தி | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சபையினால் பெக்கோ இயந்திரத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 260,472 அதாவது 50 சதவீதம் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,509,595 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,168,404 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 341,191 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய இரண்டு ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சுயமான வருமானமீட்டல் அளவினை மிகைத்து மீளாய்வாண்டின் செலவினங்களில் கருத்தில் கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்று தென்பட்டது.

(ஆ) வருமான மானியம் கிடைக்கப்பெறாத போது சபையின் வருமானங்களிலிருந்து எந்த வகையிலும் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு முடியாதென தென்பட்டது.

(இ) முன்னைய இரண்டு ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் செலவினங்களில் ரூபா 6,660,296 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. எவ்வாறாயினும் செலவினத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 ஆதன வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறான நிலுவையில் ஆண்டின் போது 11 சதவீதம் மற்றும் ஆண்டில் பட்டியலிடப்பட்டவற்றிலிருந்து 48 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 4,366,674 அளவிலான கூடிய பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் நிலுவை வரி அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) (அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 வாடகை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறான நிலுவையில் ஆண்டின் போது 22 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 1,734,123 வரை அதிகரித்திருந்தது. நிலுவை வாடகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் பஸ்மங்சந்தி, வலஸ்முல்ல பொதுச் சந்தை, முதுன மற்றும் வலஸ்முல்லயில் மீச்சந்தை தொகுதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 49 கடைகளின் உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 394,765 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 4,785,129 தொகையுமாக கிடைக்க வேண்டியிருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல் மதிப்பீடு

வருடாந்த பாதீட்டு முன்மொழிவுகள் மூலம் வீதி நிர்மாணத்திற்காக ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்ததன் பிரகாரம் மூலதன வருமானம் கிடைக்காமையால் முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 மிகை நிதியினை முதலீடு செய்யாமை

மீளாய்வாண்டின் போது பிரதேச சபையின் பொது நிதிக் கணக்கில் மாதாந்த சராசரி ரூபா 6,195,847 அளவிலான மிகை மீதியொன்று காணப்பட்ட போதிலும், அம்மீதியை குறுகிய கால முதலீடொன்றில் ஈடுபடுத்தி வட்டி வருமானத்தை உழைக்கும் வகையில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 பதவியணியினர் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் பதவியணியில் இருபது பேர் மிகையாகவும் பதின்மூன்று பேர் வெற்றிடங்களாகவும் காணப்பட்டன. மிகையான பதவிகளை முறைப்படுத்துவுதற்கும் வெற்றிடங்களான பதவிகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

### 3.3.1 உப வீதிகளை அபிவிருத்தி செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான திட்டமொன்றின் பிரகாரம் வீதிகளை நிர்மாணிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்நடவடிக்கைகளுக்காக சபைக்குச் சொந்தமான சபையின் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றை பயன்படுத்தாமல் ரூபா 1,589,010 ஆன மேலதிக செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 177 விதிக்கு இணங்காமல் விலை கோரல் மேற்கொள்ளாமல் உழவு இயந்திரம் மற்றும் டிபர் வண்டி வழங்கலுக்காக வெளித்தரப்பினருக்கு ரூபா 84,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3.2 வாகன நிறுத்துமிடங்களை நிர்மாணித்தல்

புதிய மற்றும் பழைய அலுவலக வளவில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இரண்டு இடங்கள் நிர்மாணிக்கும் போது வீரகெட்டிய மற்றும் வலஸ்முல்ல ஆகிய சந்தை கட்டிடங்களிலிருந்து அகற்றி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த மிகவும் நல்ல நிலைமையில் காணப்பட்ட அமானா தகரங்கள், கல்வனைஸ் குழாய்கள், பொக்ஸ் பார் போன்றவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 677,650 செலவில் அப்பொருட்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 05 செலவின விடயங்களில் ரூபா 70,768,343 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் 02 வருமான விடயங்களில் அடையப் பெறாத இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 62,965,738 தொகையும் சுய வருமானமீட்டல்களிலிருந்து 30 சதவீதம் மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திட்டத்தை தயாரிக்கும் போதும் உள்ளகக் கணக்காய்வ அறிக்கைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 134(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளைவற்ற சொத்துக்கள்**

2008 ஆம் ஆண்டின் போது ரூபா 6,645,000 செலவினத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வீதியை தகர்க்கும் இயந்திரம் 2012 மே மாதம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் 08 காணிகள் மற்றும் 25 மயான பூமிகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 39,628,497 ஆக இருந்ததுடன் அதில் 3 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 1,264,510 ஆன மீதியொன்றும் 5 ஆண்டு காலம் கடந்திருந்த ரூபா 74,268 மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்